TAMIL NADU LEGISLATURE LIBRARY
11 APR 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Dental check up for School Children

* 550 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any dental check up has to be undertaken for school going children studying in the Elementary and Secondary schools in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுக்கொரு முறை வைத்தியப் பரிசோதனை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லா இடங்களிலும் இல்லை. குறிப்பிட்ட சில கல்வி மாவட்டங்களில் இதற்கென்று தனி மருத்துவ ஆய்வுக்குழு ஒன்று அமைத்து, அதன்மூலம் பொது மருத்துவ உதவிகளையும் பள்ளி மாணவர்களுக்குச் செய்து வருகிறார்கள். குறிப்பாக, வடார்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும். ஈரோடு, நாமக்கல் ஆகிய இடங்களிலும் இந்தக் குழுக்கள் அமைத்து, மாணவர்கள் செலுத்தும் மருத்துவக் கட்டணத்தைப் பயன்படுத்தியும், நன்கொடை திரட்டியும், அதற்கென்று மெடிகல் வான் வைத்து, ஒரு மருத்துவ அதிகாரியையும் மற்றப் பணியாளர்களையும் நியமித்து, மாணவர்களுடைய பொது உடல் நலத்தைப்பற்றி ஆய்ந்து வருகிறார்கள். அத்துடன் சேர்த்து, பல் நோய் பற்றியும் கவனித்து வருகிறார்கள். அந்தத் திட்டத்தை மற்றைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் எண்ணம் இருந்து கொண்டு வருகிறது. அதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது.

[1971 ஜூலை 30

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முறையாக ஆண்டுக்கொரு முறை நடத்தப்படவேண்டிய மருத்துவப் பரிசோதனைகள் சிலபல பள்ளிகளில் நடத்தப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசு நேரடியாக அறியாது. ஆனால், ஆண்டுதோறும் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்பதுதான் நியதி. அதற்காகத்தான் மாணவர்களிடமிருந்து மருத்துவக் கட்டணம் வசூலிக்கிறோம். எங்காவது மருத்துவப் பரிசோதனை செய்யப்படாமலிருந்து கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அங்கே அதை முறையாகச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

திரு. எ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவில் அரசாங்க மருத்துவ மனையில் பணியாற்றுகின்ற பல் டாக்டர் அவர்கள் தாமாகவே நகரத்திலிருக்கின்ற தொடக்கப் பள்ளிகளுக்கெல்லாம் சென்று பல் பரிசோதனை செய்து வருகிறார்கள். அவர்கள் மேலும் அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படித் தாமாகவே உதவி செய்ய முன்வருகிறவர்களின் பணிகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், அதற்கான முயற்சியினை அங்கேயிருக்கின்ற மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி, இப்படிப்பட்ட குழு அமைப்பதன்மூலம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், மாணவர்களிடமிருந்து 'மருத்துவக் கட்டணம்' என்று வசூலிக்கிறோம். அதை வைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்து தர அவர்களுடைய பணிகள் மிகச் செம்மையாக நடைபெற என்ன வசதி வாய்ப்புச் செய்து தரவேண்டுமோ அதைச் செய்வதற்கு முயற்சி செய்யலாம். மாவட்டக் கல்வி அதிகாரி மூலம் இந்த முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: உப தலைவர் அவர்களே, உயர் நிலைப்பள்ளிகளில் சேருகின்ற மாணவர்களுக்கு மாத்திரமல்லாமல், ஆறு வயதில் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றபோதே 'ஸ்கூல் ஹெல்த் ப்ரொக்ராம்' என்ற ஒன்று இருந்ததே அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சாதாரணமாகத் துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு வகைப் பள்ளி மாணவர்களையும் சேர்த்துத்தான் இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. நான் ஏற்கனவே சொன்னபடி, ஒருசில மாவட்டங்களில் குழு அமைத்திருப்பதைப்போல, மற்ற எல்லா மாவட்டங்களிலும் குழுக்களை அமைத்து, அவற்றினைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் இருந்து வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மருத்துவப் பரிசோதனைக்கு ஸ்பெஷலிஸ்ட்ஸ் அனுப்பப்படுகின்றனரா?

TRUTH ALONE TRIUMPHS

1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி குழுக்கள் அமைந்த இடத்தில் ஒரு டாக்டர், ஒரு மெடிகல் அட்டென்டென்ட் இருக்கிறார்கள். மெடிகல் வான் டிரைவர், க்ளீனர் ஆகியோருக்கும் செலவு ஏற்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : This Government have introduced mobile hospitals in various places. May I know from the Hon. Minister whether this mobile hospital would be utilised for arranging for medical check-up of children in elementary schools and high-schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் ஆண்டுக்கொரு முறை செய்யவேண்டும் என்பது தான் நியதியாக இருக்கிறது. அதைப் பரவலாகவும் மிகத் திறமையாகவும் செய்கின்ற முறையில் குழுக்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களிலும் தீவிரமாகவும் செம்மையாகவும் நடத்தவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வு

* 551—வினு: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி--உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில், தமிழ்நாட்டில் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில், வெற்றி பெற்ற மாணவர்களின் சதவீதம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1969–70-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வில், வெற்றி பெற்ற மாணவர்கள் 56 சதவீதம் ஆகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பள்ளி இறுதி வகுப்புத் தேறியவர்கள் அனைவருக்கும் கல்லூரிகளில் இடம் கிடைப்பது அரிதாக இருப்பதால், உயர்நிலைப்பள்ளியோடு பி.யு.சி. வகுப்பையும் இணைக்கும் யோசனை அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது நடைபெற இயலாதவொன்று. இப்போதே உயர்நிலைப்பள்ளிகளுக்குப் போதுமான இட வசதிகள் மற்றவைகள் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. 'பி.யு.சி.' என்றால் 'ப்ரி-யூனிவர்சிடி கோர்ஸ்' என்பதாகும். ப்ரி–யூனிவர்சிடி கோர்ஸ் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருக்க வேண்டியவொன்றாகும். பி.யு.சி. யை உயர்நிலைப்பள்ளிகளோடு இணைத்துவிட்டால், அங்கு பி.யு.சி. படித்துத் தேறி வெளி வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் பட்டப் படிப்பில் இடம் கிடைக்குமா என்றால், கிடைக்காது. அப்படிப்பட்ட நிலையில் பி.யு.சி. மட்டும் படித்துவிட்டுப் பட்டப் படிப்புக்குச் செல்லும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலையை எல்லாப் பள்ளிகளிலும் வைப்பதும் பொருத்தமாக இருக்காது. பல்வேறு கல்லூரிகள் செம்மையாக நடைபெறுவதற்கு அங்கு